# சென்னை கடற்கரையில் மாபெருங் கூட்டம்.

## பத்தாயிரம் பேர்களுக்குமேல் கலந்துகொண்டனர்.

### ஊர்வலத்தில் 3000 பேர்,

### நகரமெங்கும் உற்சாகம்.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 6.

நேற்று 5-6-38 மாலை 9-30 மணிக்கு சென்னை பீபில்ஸ் பார்க்கில் 3000 பேர்கொண்ட ஹிந்தி எதிர்ப்பு ஊர்வலமொன்று கொடிகளுடனும், அட்டைகளுடனும் புறப்பட்டது- மேற்படி ஊர்வலத்தில் 36 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் தோழர் ஸ்டாலின் ஜகதீசன் அவர்களைக் கோச்சுவண்டியில் அமர்த்தி அழைத்துவரப்பட்டது. இந்தப் பெருந்திரளான ஊர்வலமானது இந்தி ஒழிக தமிழ் வாழ்க, ஸ்டாலின் வாழ்க பல்லடம் பொன்னுசாமி வாழ்க, சி. டி. நாயகம் வாழ்க என்னும் கூச்சல வானைப் பிளந்து செல்லும்படி கூவிக்கொண்டு கொடிகளையும், அட்டைகளையும் தூக்கிக்கொண்டு புறப்பட்டது. முக்கியமான தெருக்கள் வழியாக ஐகோர்ட்டு கடற்கரைக்கு ஊர்வலம் அமைதியாகவும், ஒழுங்காகவும் சென்றது. ஆங்காங்கே போலீஸ் பாதுகாப்பும் இருந்தது வழி நெடுக பூமாலைகள் ஸ்டாலின் ஜகதீசனுக்கு அணியப்பட்டன. பூமாலைகள் கணக்குவழக்கில்லாமல் சூட்டப்பட்டன. ஹிந்தி ஒடிப்போ என்னும் பாடல்களும் மந்திரி சபை ஒழிக, பார்ப்பனீயம் ஒழிக, யதேச்சாதிகாரம் ஒழிக என்னும் கூச்சல்களுடன் ஆறு மணிக்குக் கடற்கரையை அணுகிய போது, அங்கு சுமார் பத்தாயிரம் பேருக்கு மேல் சமுத்திரம்போன்ற பெருங் கூட்டம் கூடியிருந்தது. தோழர் ஸ்டாலின் அவர்களை இரண்டு தொண்டர்கள் தூக்கிக்கொண்டு போய் மேடைமேல் சாய்வு நாற்காலியில் அமர்த்தினார்கள்.

மேற்படி மாபெருங் கூட்டத்திற்கு தோழர் மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது தலைவர்கள் ஈ. வெ. ரா. சௌந்தரபாண்டியன், திருச்சி விஸ்வநாதம், சிவராஜ் முதலியவர்கள் வந்தார்கள். அவர்களைத் கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்து ஜே கோஷத்துடன் வரவேற்றினார். பிறதுமுதலில் தோழர் கே. ஏ. பி. விஸ்வநாதம் அவர்கள் ஒருமணி நேரம்வரையில் ஹிந்தியின்தீமைகளைப்பற்றியும் அதைக் கட்டாயப் பாடமாக்கும் நோக்கத்தைப்பற்றியும் விளக்கிப் பேசினார். பின்னர் தலைவர் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் 3 மணிநேரம்வரையில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இடையே சிறு தூறல்கள் விழுந்து மழை வரும்போல் இருந்தது. அதையும் ஜனங்கள் பொருட்படுத்தாமல் மிக அமைதியாகவும் உற்சாகத்துடனும் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இரவு 10 மணிவரையில் பேசினார்கள். பின்னர் தோழர் கே. எம். பாலசுப்ரமண்யம் அவர்கள் பேசினார்.

அவர் தோழர் ஸ்டாலின் அவர்கள்ளைப்பற்றி குறிப்பிட்ட போது அப் பெருந் திரளான ஜனங்களின் கண்களில் நீர்த் துளிகள் காணப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின்னர் இரவு 10-30 மணிக்கு மேல் மாபெருங்கூட்டம் தமிழ் வாழ்க ஹிந்தி ஒழிக என்னும் கோஷத்துடனும் ஈ. வெ. ரா. வாழ்க ஸ்டாலின் வாழ்க, சௌந்திரபாண்டியன் வாழ்க, விஸ்வநாதம் வாழ்க, பல்லடம் பொன்னுசாமி வாழ்க, சிவராஜ் வாழ்க என்னும் கோஷத்துடனும் கூட்டம் கலைத்தது.